## ஆழத்து முத்துக்கள் 52

# சங்கீதபூஷணம் எம்.ஏ. குலசீலநாதன்

**- கே.எஸ். பாலச்சந்திரன் -**

இலங்கைத் தமிழ்த் திரைப்படப்பாடல்களில் மறக்கப்பட முடியாத பாடல் வரிகளாலும், பாடியவரின் கம்பீர நாதக்குரலாலும் பலரையும் கவர்ந்த பாடல்

*ஈழத்திருநாடே என்னருமைத்தாயகமே*
*இரு கரம் கூப்புகின்றேன் வணக்கமம்மா*

அதேபோல மெல்லிசைப் பாடல்களிலே இசையாலும், பாடியவர்களின் குரலினிமையாலும் சிறந்த பாடலாக நினைவில் நிற்பது

*சந்தனமேடை எம் இதயத்திலே*
*உன் சதங்கையின் நாதம்தான் கேட்குதடி*

முதலாவது பாடலை எங்கள் மண்ணின் கதையைச்சொன்ன ‘குத்துவிளக்கு’ திரைப் படத்தின் ஆரம்பபாடலாகப்பாடியவரும், இரண்டாவது பாடலை தானே இசையமைத்து, இன்னுமொரு புகழ்பெற்ற மெல்லிசைப் பாடகரான எஸ்.கே. பரராஜசிங்கத்துடன் இணைந்து தேனாகப் பாடியவரும் ஒருவரே.

அவர்தான் சங்கீதபூஷணம் எம்.ஏ.குலசீலநாதன்.

வேறு சில திரைப்படப் பாடல்களையும், பல மெல்லிசைப் பாடல்களையும் அவர் பாடியிருந்தாலும், இந்த இரண்டு பாடல்களுமே அவரது பெயரை இசையுலகில் நிலைநிறுத்தப் போதுமானவை.

இலங்கையின் மெல்லிசைத் துறையின் முன்னோடிகளில் ஒருவரும் இலங்கை வானொலியில் இசைக்கட்டுப்பாட்டாளராகவும் மலேசிய, சிங்கப்பூர் வானொலிகளில் இசைக்கலைஞராகவும் பணி புரிந்தவரும், இசைமேதை பாலமுரளிகிருஸ்ணா அவர்களின் மாணவருமான சங்கீதபூஷணம் எம்.ஏ. குலசீலநாதன் அவர்கள் யாழ் மாவட்டத்திலே அராலி என்ற கிராமத்தில் 02.07.1940 அன்று முத்துச்சாமி அருளம்மா தம்பதியர்க்கு மகனாகப் பிறந்தவர்.

இவவரது தாய்மாமன் கீசகன் கந்தையா அவர்கள் ஒரு நாட்டுக்கூத்து அண்ணாவியார். அவரின் உந்துதலினால் இவர் தனது ஆறாவது வயதிலேயே இசைத்துறையில் ஈடுபடத் தொடங்கிவிட்டார். ஆரம்ப கல்வியை அனுராதபுரம் சென். ஜேம்ஸ் கல்லூரியில் ஆரம்பித்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தொடர்ந்து கல்விகற்றார் குலசீலநாதன். இவர் கல்லூரி விழாக்களில் நிறையவே இசைநிகழ்ச்சிகளில் பங்குபற்றி திறமை காட்டினார். இவரின் இசைத்திறமை கண்டு ஆச்சரியப்பட்ட கல்லூரி ஆசிரியர்களும், அதிபரும் இவரை இசைத்துறையில் முழுமூச்சாக ஈடுபடுத்தும்படி பெற்றோருக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

எனவே குலசீலநாதன், பின்னாளில் சர்வதேசப் புகழ்பெற்ற வயலின் கலைஞர் எல்.சங்கர், இசையமைப்பாளர் எல்.வைத்தியநாதன் ஆகியோரின் தந்தையரான லட்சுமி நாராயணன் ஐயர் என்பவரிடம் அராலியிலே இசைக்கலை பயின்று, இசைத்துறைப் பட்டப் படிப்பை சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தொடர 1959ல் இந்தியா பயணமானார்.

அங்கே இசையரசு எம். தண்டபாணி தேசிகரிடமும், சிவசுப்பிரமணியம், ரி.கே. ரங்காச்சாரியார், மைலம் வைச்சிரவேலு முதலியார் போன்றோரிடமும் பயின்று, இசையின் அத்திவாரத்தை கட்டி எழுப்பினார்.

அத்தோடு இராகஆலாபனை முறைகளையும், தாளபேதங்களையும் ஜனரஞ்சகமாக ரசனையூட்டும் விதத்தில் கச்சேரிகள் பாடுவதற்கு ஏற்றவாறு தான் கற்ற சங்கீதக் கலையை விருத்திப்படுத்திக் கொள்ள பாலமுரளி கிருஷ்ணாவிடமும் விசேடமாக பயிற்சி பெற்றார். அந்த வழியில் முன்னேறி 1964ல் அண்-



ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதல்தர சித்தியடைந்து சங்கீத பூஷணம் ஆனார்.

இலங்கை திரும்பியபின் 1964ல் அராலி வடக்கு மயிலியப்புலம் கந்தசாமி கோயிலில் முதலாவது கன்னி இசைக்கச்சேரி அரங்கேறியது. அதன்பின் இவர் பல இடங்களில் இசைக் கச்சேரி வழங்கினார். அப்படியாக அவர் யாழ் மாவட்டத்தில், வட்டுக்கோட்டை என்ற இடத்தில் நிகழ்த்திய கச்சேரி பற்றி, டென்மார்க்க நாட்டிலிருந்து, றமேஸ் மணிவாசகம் தனது நூலில் பின்வருமாறு சுவைபடக்கூறுகிறார்.

“வட்டுக்கோட்டை சிவன் கோவிலில் 7ம் திருவிழாவில் அமரர் குலசீலநாதன் இசை விருந்தளித்துக் கொண்டிருக்கும்போது அவரின் திறமை கண்டு உணர்வு பெருக்கெடுத்த வட்டுர் மக்கள் - ‘அத்தான் அப்பிடிப் போடு’ என்று வானுயர தங்கள் உணர்வுகளையும், குதூகலத்தையும் அன்னாருக்கு அளித்து சிலிர்த்ததை, சிறுவயதிலேயே அன்னையின் மடியில் இருந்து அகத்தில் அருந்தியவன் அடியேன்.

கிராமியவழக்கிலே அந்த ஊர் மக்கள் அப்படி உரிமை கொண்டாடி இந்த அற்புதக்கலைஞனை அப்படி செல்லமாக அழைக்கும் அளவிற்கு அவர் தெள்ளிய தமிழ் இசை வழங்கியிருக்கிறார் என்று நம்புகிறேன்.

இந்த இடத்தில் நான் நேரடியாக்கண்ட இதே போன்ற ஒரு அனுபவத்தை உங்களுடன் பங்கிட்டுக் கொள்ளத்தான் வேண்டும்.

பலஆண்டுகளுக்கு முதல் கொழும்பில் பம்பலப்பிட்டி கதிரேசன் கோயிலில் ஆடிவேல் திருவிழா. கூட்டமென்றால் அத்தனை கூட்டம். இந்தியாவிலிருந்து பிரபல நாதஸ்வரக்கோஷ்டி ஒன்று அங்கு கச்சேரி செய்யவரவிருந்தார்கள். அவர்கள் நேரடியாக இந்தியாவிலிருந்து வந்து சேர தாமதமாகியது.

இதற்கிடையில், திருவிழாக்காரர், சுருள்தலையுடன், சங்கீதக்களை நிரம்பிய ஒரு இளம் வித்வானை மேடையேற்றினார்கள். அவர் பக்கவாத்தியங்கள் புடைசூழ அமர்ந்து, எங்கள் அபிமானத்துக்குரிய சங்கீதவித்வன் பாலமுரளி கிருஷ்ணாவின் மதுரமான தொனியில் முதலாவது பாடலைப் பாடத்தொடங்கவே, அங்கங்கே நின்றவர்களும் திரளாக வந்து மேடையின் முன்னே அமர்ந்து விட்டார்கள். நானுந்தான்.

தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாக பாடல்கள் எங்களை மயங்கவைத்து, கட்டிப்போட்டன. நாங்கள் அக்கம் பக்கம் பார்க்காமல் அதற்கு அவகாசம் இல்லாதவர்களாய் இசைவெள்ளத்தில் மூழ்கித் திழைத்திருந்தோம். எங்கும் நாதத்தின் ஒலி.

திடீரென்று ஒரு சலசலப்பு. இந்தியாவிலிருந்து நாதஸ்வரக்காரர்கள் வந்து சேர்ந்துவிட்டார்கள் என்று செய்தியை சொல்லிக்கொண்டு யாரோ கோயில் பக்கமாகச் சென்றார்கள். அவையில் இருந்த நாங்கள் யாரும் அதை கவனத்தில் எடுக்காமல், மேடையில் பாடிக் கொண்டிருந்த இளைஞனான குலசீலநாதனின் இசையுடன் ஒன்றி இணைந்திருந்தோம்.

சடுதியாக பாடல் நிறுத்தப்பட்டது. பாடிக்கொண்டிருந்தவருடன் யாரோ ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். நாதஸ்வரக்கச்சேரியை ஆரம்பிப்பதற்காக நடந்து கொண்டிருந்த கச்சேரியை இடையில் நிறுத்தச் சொல்லியிருக்கிறார்கள். வயலின் வாசித்தவர், தன் வாத்தியத்தை அதன் பெட்டிக்குள் வைத்துவிட்டார். மிருதங்கவித்துவான், மிருதங்கத்தை உறையால் மூடிக்கொண்டிருந்தார். குலசீலநாதனும் மேடையைவிட்டு இறங்க ஆயத்தமானார்.

சபையினர் ஆத்திரமடைந்தனர். ஒரு இளம் வித்துவானை இப்படி அவமானப்படுத்துவது போல பாடும்போது இடையில் நிறுத்தச் சொல்வதா என்று ஆக்ரோசக்குரல்கள் ஒலித்தன. அரங்கிலிருந்து பவர் மேடையில் ஏறி, கச்சேரி தொடரப்படவேண்டும் என்று கோஷம் எழுப்பினார்கள். அவர்களில் பல் கலைவேந்தன் சில்லையூர் செல்வராஜன், கலைஞர் ஏ.ரகுநாதன், வருமானவரி அதிகாரி சுன்னாகம் பாலசுப்பிரமணியம், உட்பட நானும் ஒருவன்.

இத்தனை ஆர்ப்பாட்டத்திற்கும் மத்தியில், வந்திருந்த நாதஸ்வரக்கோஷ்டியினர் மேடைக்கு அருகில் வந்துவிட்டார்கள். அவர்களும் சககலைஞனை மதிக்கும் பாங்கில் “கச்சேரி தொடங்கட்டும்... நாங்களும் கேட்டு ரசிக்கிறோம்” என்று பெருந்தன்மையாக் கூறி அவையில் அமர்ந்துவிட்டார்கள்.

குலசீலநாதனின் கச்சேரி மீண்டும் உற்சாகமாக ஆரம்பித்தது. அவர் நிறுத்தத்தின்பின் முதலாவதாகப்பாடிய பாடல் என்ன தெரியுமா?

*ஒருநாள் போதுமா...*
*இன்றொருநாள் போதுமா... நான் பாட*
*இன்றொருநாள் போதுமா?*

விண்ணதிர கரகோஷம் ஒலித்தது. அதன் பிறகு பல பாடல்களை பாடி முழுமையாக தன் கச்சேரியை நிறைவு செய்தார், எம்.ஏ.குலசீலநாதன்.

இந்த நினைவு என்னால் மறக்கமுயாத சில சம்பவங்களில் ஒன்றாக மனதில் பதிந்துவிட்டது.

இவரின் இசைத்திறனை அறிந்து கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரிகள் இவரை அங்கு அழைத்து இசைக் கச்சேரிகளுக்கு இடமளித்தார்கள். 1968ல் இலங்கை வானொலியினர் இவரை பகுதி நேர இசைத்தயாரிப்பாளராக நியமித்தார்கள். மெல்லிசைத் தயாரிப்பாளராகப் பணியைத் தொடங்கிய இவர் இசைக்கட்டுப்பாட்டாளர் பதவி வரை உயர்ந்தார்.

குலசீலநாதன் இசைப்பிருந்தா, இசைக்கோலம், சனரஞ்சனி போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் கர்நாடக இசையை எளிய மக்களுக்கு புரியும்படியாக அள்ளிக் கொடுத்து, இலட்சக் கணக்கான ஈழத்து இசை ரசிகர்களை தன் வசம் கொள்ளை கொண்டார்.

இசைபிருந்தா என்ற மெல்லிசைப் பிரவாகத்தில் எஸ்.கே. பரராஜசிங்கம், வி. முத்தழகு, எஸ். கலாவதி, அருந்ததி சிறீரங்கநாதன், ரா. ஜெயலஷ்மி, சுபத்திரா, சந்திரமோகன், அம்பிகா தாமோதரம், கௌரீஸ்வரி ராஜப்பன் போன்ற பல கலைஞர்களை இவர் ஈடுபடுத்தினார்.

பேராசிரியர்கள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி போன்றோருடன் இணைந்து இசைச் சித்திரம் போன்ற நிகழ்ச்சிகளை ஆய்வுக் குரிய வகையில் குலசீலநாதன் தயாரித்தார்.

தொடர்ந்து சிங்கப்பூர் வானொலியிலும் பணியாற்றிவிட்டு, பிரான்ஸ் நாட்டுக்கு புலம் பெயர்ந்த குலசீலநாதன் அங்கேயும் தன் இசைப்பணியைத் தொடர்ந்தார். எஸ்.ஜேசுரத்தினத்தின் ‘முகத்தார் வீடு’, ‘இன்னுமொரு பெண்’ ஆகிய சின்னத்திரைகளிலும் தன் குரல் வளத்தை நிரூபித்துள்ளார். இசைக் கச்சேரிகளிலும், அரங்கேற்றங்களிலும் பாடினார்.

ஈழத்து இசைக் கலைக்கு பேரிழப்பாக அமையும் வகையில் எம் ஏ. குலசீலநாதன் 2004 மே மாதம் 20ந் திகதி பாரிஸ் நகரில் காலமானார்.

அந்த ‘மணிக்குரல்’
நாதம் ஓய்ந்தது.



ksbala@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

**இணையத்தளத்திலும் ‘தாய்வீடு’**

**www.thaiveedu.com**